பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 05 2026 THURSDAY 7:15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

2. நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மக்கள் இயக்கமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

3. தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை, நாடுமுழுவதும் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

4. வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 3 தினங்களுக்கு கடும் வெப்பஅலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐபிஎல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி 47 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

>>>>><<<<<

விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கரும்பு மற்றும் வெங்காயம் பயிரிடும் விவசாயிகளுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கவும், வேளாண் துறை சார்ந்த வர்த்தக நடைமுறைகளை மேம்படுத்தவும் அரசு உறுதியுடன் உள்ளதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நிலத்தடி நீர் ஆதாரம், நீண்டகால நீர்ப் பாதுகாப்பு போன்ற திட்டங்களை மாபெரும் மக்கள் இயக்கமாக மேற்கொள்வதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், கிராமப்புற குடிநீர் விநியோகம், நீர் ஆதாரங்கள் மற்றும் பாசன உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

பாசனத்திற்காக நீர் ஆதாரங்கள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

பல்வேறு நீர் பாதுகாப்புத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது தொடர்பான விரிவான செயல்திட்டத்தை மாநில அரசுகள் வகுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

குறைந்த செலவில் நிலத்தடி நீர் ஆதாரத்தை அதிகரிப்பதற்கு, மழைநீர் சேகரிப்புத் திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்த வேண்டும் என்று திரு சி ஆர் பாட்டீல் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை, இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதிலும் உள்ள மசூதிகளில் நடைபெறும் சிறப்பு தொழுகைகளில் ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர்.

மத நல்லிணக்கம், சகோதரத்துவம், ஈகை ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, தலைவர்கள் பலர் இஸ்லாமிய மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்தப் பண்டிகை, பக்தி, தியாகம், மற்றும் தன்னலமற்ற சேவைக்கு அடையாளமாகத் திகழ்கிறது என்று தெரிவித்துள்ளார்.

விளிம்புநிலை மக்களுக்கு மனிதாபிமான சேவைகளை வழங்குவதற்கு இப்பண்டிகை உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் மக்களிடையே அன்பு, நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கான தீர்மானத்தை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

நான்கு உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மூத்த வழக்கறிஞர் ஒருவர் என ஐந்து பேரை நீதிபதியாக நியமனம் செய்வதற்கு, உச்சநீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

இதுதொடர்பாக உச்சநீதிமன்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான கொலீஜியத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பஞ்சாப் - ஹரியானா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி Sheelnagu, மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஸ்ரீசந்திரசேகர், மத்தியப்பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் சச்தேவா, ஜம்மு கஷ்மீர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி Arun Palli மற்றும் உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் மோகனா ஆகியோரை உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது, உச்சநீதிமன்றத்தில் 32 நீதிபதிகள் உள்ள நிலையில், அடுத்த மாதம் 2 நீதிபதிகள் ஓய்வு பெறுவதை ஒட்டி, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்குக்கான தேசிய விருதுக்கு, உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள், ஆசிரியர்களின் பெயர்களை பரிந்துரைக்குமாறு உயர்கல்வித் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

2026-ம் ஆண்டிற்கான தேசிய விருதுக்கு, அதற்கான பிரத்யேக இணையதளத்தில் ஜூலை 5-ம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் பரிந்துரைகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்துடன் இணைந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்தியாவில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருதுக்காக பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள், இளங்கலை அல்லது முதுகலை படிப்பில், குறைந்தது ஐந்து ஆண்டுகள் முழு நேர ஆசிரியப் பணி அனுபவமும், 55 வயதிற்குட்பட்டவர்களாகவும் இருப்பது அவசியம் என்றும் உயர்கல்வித்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஹைதராபாதைச் சேர்ந்த தனியார் நிறுவனத்திற்கு, தேர்வு மதிப்பீடு ஒப்பந்தம் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை மத்திய இடைநிலை கல்வி வாரியம் நிராகரித்துள்ளது.

இதுதொடர்பாக CBSE வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த குற்றச்சாட்டுகள் தவறானவை என்றும் அடிப்படை ஆதாரமற்றவை என்றும் தெளிவுபடுத்தியுள்ளது.

தேர்வு மதிப்பீடு தொடர்பான ஒப்பந்தங்களை வழங்குவதில் பொதுவான நிதிசார் விதிமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாக மத்திய இடைநிலை கல்வி வாரியம் குறிப்பிட்டுள்ளது.

>>>>><<<<<

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று குஜராத் செல்கிறார்.

அவரது இந்தப் பயணத்தின் போது, காந்திநகரில் பொதுமக்கள் பயன்பாடு, கல்வி மற்றும் கிராமப்புற உள்கட்டமைப்பு தொடர்பான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பின்னர், அஹமதாபாதில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

இதனையடுத்து, Shahibaug மையத்தில், காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களின் தயார் நிலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் குறித்த உயர்நிலை ஆய்வு கூட்டத்தில் திரு. அமித் ஷா பங்கேற்கிறார்.

>>>>><<<<<

ஐரோப்பிய யூனியன் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான உயர்நிலைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளியுறவு அமைச்சர் திரு ஜெயசங்கர் சைப்ரஸ் சென்றடைந்தார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவர் திரு kaja kallas மற்றும் சைப்ரஸ் வெளியுறவு அமைச்சர் டாக்டர் Constantinos Kombos ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்,

>>>>><<<<<

அஸ்ஸாம் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டில் சம உரிமை மற்றும் பொது சிவில் சட்ட நடைமுறைகளை கொண்டு வருவதற்கு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக இது அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த பொதுசிவில் சட்டத்தை உத்ராகண்ட், குஜராத் மாநிலங்கள் ஏற்கனவே அமல்படுத்தியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து மக்களுக்கும் சமநீதி கிடைப்பதை உறுதி செய்வதற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் இந்த பொதுசிவில் சட்டம் உறுதுணையாக அமையும் என்று திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

கிராமப்புறங்களில் விளையாட்டில் ஆர்வமுள்ள சிறார்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு விருப்பமுள்ள விளையாட்டில் பயிற்சி அளிப்பதற்கான புதிய திட்டத்தை மாநில அரசு தொடங்கவுள்ளதாக ஹரியானா மாநில முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.

சண்டிகரில், அம்மாநில முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான ஐந்தாண்டு திட்டத்தை செயல்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இத்திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக, பஞ்சாயத்துகள், பள்ளிகள் மற்றும் விளையாட்டுத் துறை இணைந்து, இதற்கான செயல்திட்டத்தை வடிவமைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கிராமப்புறங்களில் விளையாட்டு மைதானங்களை அமைக்கப்படுவதை விளையாட்டுத் துறை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு நயாப் சிங் சைனி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 3 தினங்களுக்கு கடும் வெப்பஅலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மத்தியப்பிரதேசம், விதர்மா, தில்லி, சண்டிகர், ராஜஸ்தான், ஹரியானா, சத்திஷ்கர், பஞ்சாப், தெலங்கானா உள்ளிட்ட பகுதிகளில் இன்று கடும் வெப்பம் நிலவும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, ராஜஸ்தான் மற்றும் உத்தரபிரதேசத்தில் இன்று புழுதிக்காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பீகார், தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

ஐபிஎல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி 47 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

சண்டிகரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் ஆடிய ராஜஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 243 ரன் எடுத்தது.

இதனையடுத்து, 244 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஹைதராபாத் அணி 19 புள்ளி 2 ஓவரில் 196 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>><<<<<